# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 13.05.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நுஸூலுல் மஸீஹ் என்ற தமது நூலில் கூறுகிறார்கள்:** ''இறைவனும் அவனது ரஸூலும் எப்போதும் வெற்றி பெறுவர் என்பதை இறைவன் தொடக்கம் முதலே எழுதி வைத்து விட்டான். இதை தனது நடைமுறையாக்கி விட்டான். எனவே நான் அவனது ரஸூல் அதாவது அவனால் அனுப்பப்பட்டவன் ஆவேன். ஆனால் புதிய ஷரீஅத்தோ அல்லது புதிய வாதங்களோ அல்லது புதிய பெயரையோ அல்லாமல் அந்த கண்ணியம் மிகுந்த நபி, காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் பெயரையே கொண்டவனாகவும், அவரின் சாயலிலும், அவரின் வெளிப்பாடாகவும் தோன்றியுள்ளேன். எனவே தொடக்கத்திலிருந்தே அதாவது ஆதம் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலம் வரை இவ்வசனம் உண்மையாகி வந்துள்ளது. அது இப்போதும் எனக்கு ஆதரவாக உண்மையாகும்.''

இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள வசனம் சூரா முஜாதலா –வின் வசனமாகும்.

சில நாட்களுக்கு முன் பாகிஸ்தானிலிருந்து ஒருவர் எனக்கு கடிதம் எழுதினார். கடிதம் எழுதியவரின் கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. ஏனென்றால் இக்கடிதத்தை எழுதியவர் நிலைமையை இவ்வாறு வரைந்துள்ளார். எனது கருத்தின்படி இதை பொதுவான கருத்து என்று கருத முடியாது. எழுதுகின்றவர் இவ்வாறு கூறுகிறார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் நபியாவார்கள் என்ற கருத்தை நாம் நமது ஜமாஅத்தின் நூல்களிலும், ஏடுகளிலும் இன்னும் அதிகமாக எழுதி பரப்ப வேண்டும். ஏனென்றால், மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று கூற கூச்சப்படுகின்றனர் என்று எழுதுகின்றார். எனது பார்வையில் இது ஜமாஅத்தினர் மீது கொள்ளப்படும் தப்பெண்ணமாகும். இதற்கு ஒரு பொதுவான கருத்து என்ற வடிவம் கொடுக்க முடியாது. இக்கடிதத்தை எழுதியவருடன் பழகுபவர்கள் சில சூழ்நிலைகளின் காரணமாக இவ்வாறு கூறுவதை தவிர்த்திருக்கலாம். உலக சிந்தனை மேலோங்கிய சிலர் இவ்வாறு நடந்திருக்கலாம். இவர்கள் சூசகமாக நடப்பதற்கு அதிக முன்னுரிமை வழங்குபவர்கள் ஆவர். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளை படிக்காதவர்கள் ஆவர். இவர்கள் எனது குத்பாக்களையும் கேட்பதில்லை. ஏனெனில் ஏதாவது காரணங்களை எதிர்பார்த்து எப்படியாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணியை விளக்கமாக கூற வேண்டும் என்றே சில அம்சங்களை குறிப்பிடுகிறேன்.

தம்மை அஹ்மதி என்று கூறுகின்ற ஒவ்வொருவரும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நபியுல்லாஹ் ஆவார்கள் என்பதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். உலகத்தின் எந்தவொரு பகுதியில் வசிக்கும் நபர், அவர் தம்மை அஹ்மதி என்று கூறுபவராக இருந்தால், அவரது உள்ளத்தில் இதைப் பற்றி சிறிதளவு ஐயம் இருந்தாலும் அதை போக்கிக் கொள்ள வேண்டும். நான் வாசித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த மேற்கோளில் கூறியிருப்பது போன்று அவர்கள் நபியுல்லாஹ் ஆவார்கள். ஆனால் புதிய ஷரீஅத்தைக் கொண்டவர்கள் அல்ல. கண்ணியமிகுந்த நபி, ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவர்களது பெயரைக் கொண்டவரும், வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் என்ற திருக்குர்ஆனின் முன்னறிவிப்பிற்கேற்ப நபி ஆவார்கள்.

பாகிஸ்தானின் அஹ்மதிகளைப் பொருத்தவரையிலும் அல்லது இந்தோனேஷியாவைச் சேர்ந்த அஹ்மதிகளைப் பொருத்த அளவிலும், இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று ஏன் கூறுகிறார்கள்? ஏன் நம்புகிறார்கள் என்பதற்காகத்தான் இவர்கள் அநீதியின் ஆட்டுரலில் அறைக்கப்படுகின்றனர். வெறுப்புணர்வு கொண்ட ஒரு சிலரைத் தவிர பொதுவாக பாகிஸ்தானிய அஹ்மதிகளைப் பற்றி இவர்கள் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று கருதுவதில்லை என்று கூற முடியாது. நமது எதிரிகள் நவூதுபில்லாஹ் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இறுதி நபி என்று நம்புவதாக மிகைப்படுத்தி தவறான முறையில் அஹ்மதிகளின் மீது ஆட்சேபனை செய்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைத் தவிர வேறு இறுதி ஷரீஅத்தைக் கொண்ட நபியை எந்தவொரு அஹ்மதியும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட மேலாக வேறு எந்த நபியையும் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தகுந்த கண்ணியத்தை அஹ்மதிகள் தான் எடுத்துக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, அவர்களை நேசிப்பவர்களுக்கு, அவர்களை உண்மையான முறையில் பின்பற்றுபவர்களுக்கு அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று ஒருவர் கூறுவதை பெருமையாகக் கருதுபவருக்கு இறைவன் நபித்துவ பதவியை வழங்கியுள்ளான். இதுவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மையான உயர் பதவியாகும்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் நபியுல்லாஹ் ஆவார்கள். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று நம்பவில்லையாயின், இஸ்லாத்தின் மறுமலர்ச்சியும், இஸ்லாத்தின் வெற்றியும் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் மூலமே நடைபெறும் என்ற நமது வாதம் சரியாகாது. ஏனென்றால் வெற்றியின் இறைவனது வாக்குறுதி ரஸூலோடு சேர்ந்ததாகும். இக்கருத்தை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. இது எந்தவொரு முஜத்தித்துடனோ அல்லது சீர்திருத்தவாதியுடனோ கூறப்படவில்லை. இஸ்லாம் இறுதிக் காலத்தில் வெற்றி பெறும் என்ற வாக்குறுதி வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் என்ற இறை வசனத்தை மெய்ப்பிக்கும் மூஃமின்களின் ஜமாஅத்துடன் செய்யப்பட்ட வாக்குறுதியாகும். எனவேதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், மஸீஹ் மற்றும் மஹ்தி தோன்றி விட்டால் பனிமலைகளில் தவழ்ந்து சென்றாவது எனது ஸலாத்தை எட்ட வைக்க வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு வலியுறுத்திக் கூறினார்கள். ஏனென்றால் இவ்வாறு செய்வதால் உங்களது ஈமானை வளர்த்துக் கொள்வீர்கள். மேலும் இஸ்லாத்தின் வெற்றிக்காக நிகழ்த்தப்படும் இறுதிப்போரில் பங்கு பெற்று என்னை உண்மையாகப் பின்பற்றுபவர்களாக ஆகி விடுவீர்கள். இறைவனின் விருப்பத்தைப் பெறுபவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள். உண்மையான மூஃமின்களாக ஆகி விடுவீர்கள். இந்தப் போர் வாளினாலோ அல்லது பீரங்கிகளாலோ நிகழ்த்தப்படாது. எனவே அஹ்மதிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதால் அல்லாஹ்வின் மீதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதும் கொண்ட நம்பிக்கை இன்னும் உறுதியடைய வேண்டும் எனவும், இஸ்லாத்தின் வெற்றியின் காட்சிகளைக் காணவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபியில்லை என்றால், பிறகு கிலாஃபத்தும் இல்லை என்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் கிலாஃபத் நுபுவ்வத்துடன் தொடர்புடையதாகும். கிலாஃபத்தைப் பற்றி நுபுவ்வத் வழியில் கிலாஃபத் தோன்றும் என்றே வந்துள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காத்தமுல் குலஃபா ஆவார்கள். காத்தமுல் குலஃபாவான காரணத்தால் அவர்களுக்கு நுபுவ்வத்தின் பதவி கிடைத்தது. இதன் பின்னர் அவர்களின் மூலம் கிலாஃபத்தின் தொடர்ச்சி ஆரம்பமானது. எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த அமைப்பில் காணப்படும் தொடர்ச்சி கிலாஃபத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தத் தொடரை நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று நம்பினால் தான் கடைபிடிக்க முடியும்.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்காக சிலர் வந்தார்கள். அப்போது அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கமான போதனை செய்தார்கள். அதன் சாராம்சம் இதுவாகும்.

''வெறும் நாவினால் பைஅத் மற்றும் தவ்பா செய்வது போதுமானதல்ல. மாறாக உள்ளத்தால் ஒப்புக் கொள்ள வேண்டும்.''

இவ்வாறு செய்தால் இறைவனது வாக்குறுதிகள் நிறைவேறும் காட்சிகளையும் காண்பீர்கள். பைஅத் செய்பவர் தாம் பைஅத் செய்து தம்மில் தூய்மையான மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும் என விரும்புகிறார். இந்தக் காட்சிகளை இன்றும் பைஅத் செய்பவர்கள் கண்டு வருகின்றனர். அவர்கள் ஆன்மீகத்தில் உயர்கிறார்கள். பைஅத் செய்தவர்களில் பலர் தமது கடிதத்தில் இதை வெளிப்படுத்துகின்றனர். அவர்களிடம் உருவாகின்ற தூய மாற்றங்களை பிறரும் உணர்கின்றனர். மனைவி மக்கள் இவர் எப்படி இருந்தார். ஆனால் இவருக்கு என்னவாகி விட்டது. இப்படி மாறிவிட்டாரே! என்று ஆச்சரியப்படுகின்றனர். இதுவே உண்மையான பைஅத் ஆகும். இவ்வாறான தூய மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் செய்த நபர்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்:**

''உங்களுடைய பைஅத்தை ஒருபோதும் உலக ஆதாயத்துடன் நிபந்தனைக்குட்படுத்தாதீர்கள். மாறாக உங்களது செயல்களில் மாறுதல்களை உருவாக்குங்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் இறைவன் அருட்கொடைகளும், நற்கூலியும் வழங்காமல் விட்டு விடுவதில்லை என்பதைப் பார்ப்பீர்கள்.''

**மேலும் கூறினார்கள்:** ''நமது வெற்றிக்கான ஆயுதம் இஸ்திக்ஃபார், தவ்பா, மார்க்க அறிவைப் பெறுவது, அல்லாஹ்வின் கண்ணியத்தை உள்ளத்தில் கொள்வது, மற்றும ஐவேளைத் தொழுவது ஆகியவையாகும்.''

**தொடர்ந்து கூறினார்கள்:** ''தொழுகை துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான திறவுகோலாகும். தொழும் போது துஆ செய்யுங்கள். இதில் கவனக்குறைவாக இருக்காதீர்கள். எல்லா தீங்கிலிருந்தும் அது இறைவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் தொடர்பாக இருந்தாலும், இறை அடியார்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் தொடர்பாக இருந்தாலும் அதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.''

எனவே நாம் இந்த முக்கிய அம்சங்களை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த அறிவுரைகளை புதிதாக பைஅத் செய்திருந்த அம்மக்களுக்காக மட்டும் கூறவில்லை. மாறாக இவை ஒவ்வொரு அஹ்மதிக்கும் உரியவையாகும். பழைய அஹ்மதிகளின் ஈமானில் இதனால் அதிக வளர்ச்சி இருக்க வேண்டும். எனவே, புதிய அஹ்மதிகளை விட பழைய அஹ்மதிகள் இதற்காக அதிக முயற்சி செய்ய வேண்டும்.

இஸ்திக்ஃபார் என்றால் என்ன? அது தமது முந்தைய மற்றும் பிந்தைய பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டுவதாகும். இதன் மூலம் இறைவனின் பாதுகாப்பின் கீழ் வருவதாகும். மேலும் பாவங்கள் செய்யாமல் தவிர்ந்திருப்பதாகும். தவ்பா என்றால் ஏற்கனவே நம்மிடமுள்ள தீய வழிகளை வெறுத்து அதிலிருந்து விலகியிருப்பதாக உறுதியான, வலுவான தீர்மானம் எடுத்தலாகும். பிறகு அந்த தீர்மானத்தின் மீது இறைவனிடம் உதவியை வேண்டியவாறு நிலைத்திருத்தல், அதன்படி செயல்படுதலாகும். அந்த உறுதிப்பாட்டை விட்டு எந்த ஒன்றும் அசைக்க முடியாத அளவுக்கு அதில் நிலைத்திருக்க வேண்டும்.

அதன் பிறகு மார்க்க அறிவைப் பெறுவதாகும். இதில் முதன்மையானது திருக்குர்ஆனாகும். பின்பு திருக்குர்ஆன் மற்றும் சரியான நபிமொழிகளின் அடிப்படையில் அமைந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கருத்துக்களாகும். அவர்களது நூல்கள் மற்றும் இதர கூற்றுக்களாகும். இவை இஸ்லாத்தின்

உண்மையான போதனைகளை சிறந்ததென்று உறுதியான சான்றுகள் மற்றும் ஆதாரங்களின் வாயிலாக உலகத்தின் முன் நிரூபணம் செய்கின்றன. இதற்கு எதிராக வேறெந்த மார்க்கமும் நிற்க முடியாது. ஏனென்றால் இஸ்லாம் ஒன்றுதான் இறுதியான, முழுமையான, நிறைவான மார்க்கமாகும்.

பின்பு இறைவனின் கண்ணியத்தை மனதில் கொள்வதாகும். இறைவனின் கண்ணியத்தை கருத்தில் கொள்வது என்றால் என்ன? எல்லாவற்றையும் படைத்தவன் இறைவனாவான் என்று நம்ப வேண்டும். அவனே எல்லா தேவைகளையும் நிறைவேற்றுபவனாவான். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தையும் இறைவனின் முழுமையான அறிவு சூழ்ந்துள்ளது. அவனே நமது ரப் ஆவான். வாழ்வும் மரணமும் அவன் கையில் தான் இருக்கிறது. அவன் எல்லாவற்றின் மீதும் முழுமையான ஆற்றல் பெற்றவனாவான். அவன் எல்லா இடங்களிலும் இருக்கிறான். ஒவ்வொரு வினாடியும் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நம்ப வேண்டும். இவ்வாறு நம்பினால் மனிதன் இறைவனுக்கு விருப்பமில்லாத எந்தவொரு காரியத்தையும் செய்ய மாட்டான்.

இறைவனின் இந்த கண்ணியம் உள்ளங்களில் நிலைபெற்று விட்டால் பிறகு ஐவேளைத் தொழுகைகளின் பக்கம் கவனமும் இருக்கும். இந்த கவனம் தானாகவே பிறக்கும். துஆக்களின் பக்கமும் கவனம் பிறக்கும். இறைவனின் வாக்குறுதிகள் முழுமை அடைந்தால் இறைவனோடு நமக்கு இருக்கும் இந்தத் தொடர்பு வளர்வதன் மூலம் நம்பிக்கை வலுவடைந்து கொண்டே செல்லும். தொழுகையைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான திறவுகோல் என்று கூறியுள்ளார்கள். எனவே தொழுகைகள் தான் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும் உண்மையான துஆவாகும். இது மனிதனுக்கு இறைவனுடன் உயிரோட்டமுள்ள தொடர்பைப் பெற்றுத் தருகிறது. எனவே தொழுகைகளை சரியான முறையில் அதற்குரிய நேரத்தில் தொழுவதற்கான கட்டளை திருக்குர்ஆனிலும் உள்ளது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது சமுதாயத்திற்கு இதற்கான குறிப்பான கட்டளையும் இட்டுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இதை மிகவும் வலியுறுத்தியுள்ளார்கள். எனவே மனிதன் இதன் பக்கம் கவனம் செலுத்தினால் இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்வதன் பக்கமும் கவனம் ஏற்படும். அதே போன்று இறை அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதன் பக்கமும் கவனம் ஏற்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இந்த தூய மாற்றத்தை நீங்கள் உங்களிடம் ஏற்படுத்தினால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தால் வெளிப்படும் இஸ்லாத்தின் நிர்ணயிக்கப்பட்ட வெற்றியில் நீங்களும் அங்கம் வகிப்பவர்களாகலாம் என்று கூறுகிறார்கள். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் வெற்றியை வழங்குவான் என்பதில் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. ஆனால் நமக்கு அறிவுரை வழங்கும் விதமாக அவர்கள் நமது வெற்றிக்கான ஆயுதங்கள் இவையாகும். எனவே இவைகளை நீங்கள் மேற்கொண்டால் வெற்றியில் நீங்களும் அங்கம் வகிக்கலாம் என்று கூறுகிறார்கள். இல்லையென்றால் நீங்கள் பெயரளவில் அஹ்மதிகளாக இருப்பீர்களே தவிர செயல் அடிப்படையில் அஹ்மதிகளாக இருக்கமாட்டீர்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வெற்றிப்படையில் அங்கம் வகிக்கின்ற செயல்பூர்வமான அஹ்மதியாக நம்மில் ஒவ்வொருவரும் திகழ வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் இந்த வெற்றிக்கான பல நற்செய்திகளை பல்வேறு இடங்களில் வழங்கியுள்ளான். ஜமாஅத்திற்காக உதிக்கின்ற ஒவ்வொரு பகலிலும் நாம் இந்த நற்செய்திகள் நிறைவேறுவதைக் காண்கின்றோம்.

ஜமாஅத்திற்கு நிலவி வருகின்ற கடுமையான எதிர்ப்பை வைத்து கூறுவதாக இருந்தால், இது ஒரு மனிதரால் உருவாக்கப்பட்டிருப்பின் ஒரு அடி முன்னேறுவது வெகுதூரம்; இது உயிருடன் இருப்பது கூட கடினமாகியிருக்கும். ஆனால் அல்லாஹ்வின் வாக்குறுதிகள் இருப்பதால் எல்லாவித எதிர்ப்புகளையும் மீறி ஜமாஅத் முன்னேற்றப் பாதையில் வளர்ந்து வருகிறது. இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களுக்கு இல்ஹாம்களின் வாயிலாக முன்னேற்றங்களுக்கான நற்செய்திகளை வழங்கினான். இதை முன்னதாக நான் கூறினேன். இறைவன் வழங்கியுள்ள நற்செய்திகள் யாவும் சத்தியமானவை என்று நாம் உறுதியாக நம்ப வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் நிச்சயம் வெற்றி பெற்றே தீரும் என்பது நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் இறைவன் முன்னதாகவே நற்செய்திகளை வழங்கும் போது அதை ஏற்றுக் கொள்கின்ற மக்களின் மீது சில பொறுப்புகள் சுமத்தப்படுகின்றன. இவைகளை ஏற்று நடப்பதும் பின்பற்றுவதும் அவசியமாகும். இறைவன் நான் உமது தப்லீகை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று கூறுகிறான் என்றால் இந்தப் பணியை இறைவன் தான் செய்கிறான்.

தற்போதைய காலகட்டத்தில் இறைவன் M.T.A –வை இதற்கான ஊடகமாக ஆக்கியுள்ளான். இதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தி பூமியின் எல்லை வரை சென்று சேர்ந்து விட்டது. M.T.A இதற்கான கடமையை நிறைவேற்றி வருகிறது. ஆனால் நாம் M.T.A –விற்கான கருவிகள் அனைத்தையும் பொருத்தி விட்டு பணி ஏதும் செய்யாமல், எவ்விதமான நிகழ்ச்சிகளும் நடத்தாமல், ரிக்கார்டிங் ஏதும் செய்யாமல், தப்லீகிற்கான நிகழ்ச்சிகளை செய்யாமல் சும்மா இருந்து விட்டால் இறைவன் நமக்கு தப்லீகிற்காக வழங்கிய வழிகளைப் பயன்படுத்தாமல் நாம் நம்மையே அதிலிருந்து விலக்கிக் கொண்டவர்களாகவும் அதிலிருந்து பயன் பெறாதவர்களாகவும் ஆகி விடுவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய நூல்களைக் கொண்டு நாம் பயனடைந்து அதை பரப்பவில்லை என்றால் நாம் நமது கடமையைச் செய்யத் தவறியவர்களாகவோம். இதனால் நாம் பாவமிழைத்தவர்களாகி விடுவோம். இறைவன் இந்த பணிகள் அனைத்தையும் நிறைவேற்றியே தீருவான். நாம் இல்லையென்றால் வேறு யார் மூலமாவது இதை செய்து விடுவான். ஆனால் இறைவன் நமக்கு வழங்கிய வழிமுறைகளை நாம் பயன்படுத்தவில்லையென்றால் நாம் பாவமிழைத்தவர்கள் ஆகி விடுவோம்.

நபி அல்லது அவரது ஜமாஅத் இறை வாக்குறுதிகளைப் பெற்ற பிறகு எல்லா பணிகளையும் கைவிட்டதாக உலகில் ஒருபோதும் நடந்ததில்லை. இறைவனின் வாக்குறுதியைப் பெற்ற பிறகு அவர்கள் எல்லா வேலைகளையும் விட்டு விட்டு கையைக் கட்டிக் கொண்டு உட்காரவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட இறைவனுக்கு வேறு யார் விருப்பத்திற்குரியவராக இருக்க முடியும்? அவர்களுக்கு இறைவன் கைஸர் மற்றும் கிஸ்ரா தோற்கடிக்கப்படும் என்ற நற்செய்தியை வழங்கிய போது அவர்களின் ஸஹாபாக்கள் கடின முயற்சியும் செய்ய வேண்டியதிருந்தது. தியாகங்களும் செய்ய வேண்டியது ஏற்பட்டது. இஸ்லாத்தின் எதிரிகள் முஸ்லிம்களை அற்பமாகக் கருதி அவர்களை நசுக்கி விட எண்ணினர். உலகத்தின் பார்வையில் அற்பமானவர்களாகத் தென்பட்ட ஸஹாபாக்கள் ஈமானின் செல்வத்தால் நிரம்பியிருந்தனர். அவர்கள் தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அவர்கள் மீது பொறாமை கொள்ளப்படும் அளவிற்கு தொழுகைகளை மிக அழகிய முறையில் நிறைவேற்றுபவர்களாக இருந்தனர். அவர்கள் இறைவனின் கண்ணியத்தை உள்ளத்தில் நிலைநாட்டியவர்களாக இருந்தனர். உலக ஆசைகளும் பேரரசர்களின் வல்லமையும் அவர்களின் முன் துச்சமாக இருந்தது. அவர்கள் இறைவனின் வாக்குறுதி நிறைவேற வேண்டும் என்பதற்காக தமது பொறுப்புகளை நிறைவேற்றியவாறு கைஸர் மற்றும் கிஸ்ராவின் ஈமானை நடுநடுங்க வைத்து விட்டனர். அவர்களின் ஆட்சிகளை தூள்தூளாக்கி விட்டனர். கடின உழைப்பை மேற்கொண்டனர். தியாகங்கள் செய்தனர். அதன் விளைவாக இவை அனைத்தும் அவர்களுக்கு கிடைத்தன. அவர்களின் ஈமான் உறுதியாக இருந்தது.

அந்த மன்னர்களிடம் உலகியல் அதிகாரமும் செல்வாக்கும் இருந்தது. எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். ஆனால் இவை அனைத்தும் நம்மை ஒன்றும் செய்யவில்லை. ஏனென்றால் வெற்றி கிடைக்கும் என்பது இறைவனின் வாக்குறுதியாகும். நாம் சற்று முயற்சி செய்தால் இறைவன் நமக்கு உதவி செய்வான் என்று அவர்கள் நம்பினார்கள். முன்னறிவிப்பு நிறைவேற வேண்டியது நிறைவேறி விட்டது. ஆனால் இது நமது கையால் நிறைவேறினால் நாம் இறைவனின் விருப்பத்தைப் பெறுபவர்களாவோம் என்று அவர்கள் நினைத்தனர்.

எனவே இன்று நமது நிலை இவ்வாறு தான் இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் வழங்கிய வாக்குறுதிகள் யாவும் நிச்சயமாக நிறைவேறும் என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். நாம் இந்த வாக்குறுதிகள் நிறைவேறுவதில் நமது அற்பமான முயற்சியை ஈடுபடுத்தினால் நாம் நமது பொறுப்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்பவர்களாக இருந்தால் நாம் இறைவனின் விருப்பத்தைப் பெறுபவர்களாக ஆகிவிடுவோம். ஒவ்வொரு அஹ்மதியும் ஒவ்வொரு பணியாளரும் இந்த பொறுப்பை உணர்ந்து செயலாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில முன்னறிவிப்புகளை உங்கள் முன் வைக்கிறேன். எண்ணற்ற முன்னறிவிப்புகளும், வாக்குறுதிகளும் உள்ளன. தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் என்ற தமது நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

எல்லா மக்களும் நன்றாக கேளுங்கள். இவை வானங்களையும் பூமியையும் படைத்த இறைவனது வாக்குறுதியாகும். அவன் தனது ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரவச் செய்வான். உறுதியான சான்றுகளின் மூலம் எல்லாவற்றிற்கும் மேலாக இதற்கு வெற்றியை வழங்குவான். அந்த நாட்கள் வருகின்றன. அவை மிக அருகில் உள்ளன. உலகில் கண்ணியத்துடன் நினைவு கூறப்படும் ஒரே மார்க்கம் இதுவாக மட்டுமே இருக்கும். இறைவன் இந்த மார்க்கத்திலும் இந்த ஜமாஅத்திலும் மறைவான பல அருட்கொடைகளை வழங்குவான். இதை அழிப்பதற்கான சிந்தனையுடைய ஒவ்வொருவரையும் தோல்வி அடையச் செய்வான். இந்த வெற்றி கியாமத் வரைக்கும் நிரந்தரமாக இருக்கும்.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்கிருந்த உறுதியான நம்பிக்கையை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். இறைவன் ''இதை நான் செய்வேன்'' என்று கூறினால் பிறகு அதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை. இஸ்லாத்தின் வெற்றி இப்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாகவே நிகழும். இது நிச்சயமாக நிகழ்ந்தே தீரும். இன்ஷா அல்லாஹ். எவ்வாறு இறைவன் இந்த முன்னறிவிப்பபை நிறைவேற்றினான்; நிறைவேற்றிக் கொண்டே செல்கிறான் என்பதை நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வாசகத்தை 1903 ஆம் ஆண்டு எழுதினார்கள். அந்தக் காலத்தில் இந்தியாவிற்கு வெளியிலும் ஜமாஅத் அறிமுகமாகியிருந்தது என்றாலும் ஜமாஅத் பரவி விட்டது என்று சொல்ல முடியாது. ஆனால் இன்று அல்லாஹ்வின் அருளால் 198 நாடுகளில் ஜமாஅத்தின் பிரதிநிதிகள் உள்ளனர். உலகின் ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் ஜமாஅத்தின் அறிமுகம் சென்று சேர்ந்து விட்டது. எனவே அஹ்மதிய்யத்தின் மூலமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரவச் செய்த இறைவன் இந்த முன்னறிவிப்பின் பிற்பகுதியையும் நிறைவேற்றுவான். சில இடங்களில் ஜமாஅத்தின் எதிரிகள் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை கொண்டு செல்ல காரணமாக அமைகின்றனர். இந்த எதிர்ப்பின் காரணமாக நல்ல உள்ளம் கொண்ட தயார் நிலையில் உள்ள ஆன்மாக்கள் ஜமாஅத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றன. வெளிப்படையாக பார்த்தால் அஹ்மதிய்யத்தை விட்டு மக்களை விலக்குவதற்காக அவர்கள் ஜமாஅத்தை எதிர்க்கிறார்கள். ஆனால் நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கு இதனால் ஜமாஅத்தின் பால் கவனம் ஏற்படுகிறது. இன்றும் சில இடங்களில் அஹ்மதிய்யத்தின் அன்பு மற்றும் நேசம் மிகுந்த போதனைகள் உலகத்தின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்கிறது. இன்னும் சில இடங்களில் நமது பணிவான மற்றும் அற்பமான படைப்பினச் சேவையின் மூலம் மக்களுக்கு ஜமாஅத்தின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. இன்னும் சில இடங்களில் இறைவன் கனவுகளின் மூலம் மக்களுக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைக்கின்றான். இவ்வாறு பல வழிகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை உலகம் அடையாளம் காண்கின்றது.

ஜமாஅத்திலுள்ள ஆதாரங்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து அறியப் பெற்று நமக்கு கற்றுக் கொடுத்துள்ள உறுதியான சான்றுகளை உலகம் M.T.A –வின் மூலம் காண்கின்ற போது மக்களுக்கு அஹ்மதிய்யத்தின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. அஹ்மதிய்யத்தின் எதிரிகள் M.T.A பார்க்கக் கூடாது என்று மக்களை தடுக்க தங்களால் முடிந்த அளவிற்கு முயற்சிகள் செய்கின்றனர். விதிவிலக்கின்றி எல்லா முஸ்லிம் நாடுகளிலும் இன்று பெயர் தாங்கிய ஆலிம்கள் M.T.A

பார்க்கக் கூடாது என்று மக்களை தடுத்து வருகின்றனர். இதைப் பார்ப்பதால் உங்களது ஈமான் கெட்டுப்போய விடும். அவர்களின் குஃப்ர் மற்றும் ஏமாற்று வேலைகளால் நீங்கள் விளைவுக்கு ஆளாகி விடுவீர்கள் நவூதுபில்லாஹ் என்று கூறுகின்றனர். ஆனால் சத்தியத்தை உணர்ந்தவர்கள் இவர்கள் தவறானவர்கள் என்றால் சான்றுகளின் மூலம் இதை நிரூபித்துக் காட்டுங்கள் என்று கூறுகின்றனர். வலுக்கட்டாயமாக எங்களைத் தடுப்பது உங்களிடம் சான்றுகள் இல்லை என்பதைக் காட்டுகிறது என்றும் அறிவும் சான்றும் இல்லாமல் பேசுவது இஸ்லாமிய முறைப்படியான போதனை இல்லை என்று கூறுகின்றனர். இறை வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான மகத்துவம் இதுவாகும். மெல்ல மெல்ல ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் மூலமாக இறைவன் உலகத்தை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலடியின் கீழ் கொண்டு வருகிறான். ஏகத்துவத்தில் நிலைநிறுத்துகிறான். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் தமது பொறுப்புகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும். இறைவனின் வாக்குறுதி தான் உள்ளதே! எனவே அது பூர்த்தியாவி விடும். நாம் பணியாற்றுவதன் அவசியம் என்ன இருக்கிறது! என்று இருந்து விடக்கூடாது. எவ்வளவு பெரிய வாக்குறுதி உள்ளதோ, எவ்வளவு பெரிய நற்செய்தி உள்ளதோ இவைகளில் அங்கம் வகிப்பதற்கு அதே அளவு பெரிய பொறுப்புகளும் நம்மீது உள்ளது. இறைவனுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளில் தூய மனப்பான்மையுடன் நாம் ஈடுபட வேண்டும். இறை படைப்பினங்களுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளில் நாம் எல்லா விதமான மன எழுச்சிகளிலிருந்தும், ஆசை மற்றும் எதிர்பார்ப்புகளிலிருந்தும் விலகியவாறு ஈடுபட வேண்டும். தஃவத்தே இலல்லாஹ்வின் பணிகளில் நாம் நமது அறிவு ஆற்றல் மற்றும் முயற்சிகளைப் பயன்படுத்தியவாறு மிக அதிகமாக பங்குபெற வேண்டும். அப்போது தான் நாம் இந்த மகத்துவமிக்க பணிகளிலும், மகத்துவம் வாய்ந்த அருள்களிலிருந்தும் பயன் பெறுபவர்களாக முடியும்.

இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஓரிடத்தில் நற்செய்தி வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறான்:

அதாவது இறைவனின் கருணையின் கருவூலங்களிலிருந்து நீர் அவநம்பிக்கை அடைய வேண்டாம். நாம் உமக்கு அதிக நன்மையை வழங்கியுள்ளோம்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முஸ்லிம்களின் நிலையைப் பற்றிய கவலையை போக்கியவாறு ஆறுதல் அளித்தவாறு கூறுகிறான். இறைவனின் கருணையின் கருவூலத்திலிருந்து நீர் அவநம்பிக்கை அடைய வேண்டாம். நாம் உமக்கு மிக அதிக நன்மைகளை வழங்கியுள்ளோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த பெரும் நன்மை ஆகரீன்களுக்கு உம் மூலமாக கிடைக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆன்மீக அருட்கொடையின் நீரூற்று இப்போது உம் மூலம் மீண்டும் பெருக்கெடுத்து ஓடுகிறது. எனவே மகிழ்ச்சி அடையுங்கள். சந்தோஷத்தில் துள்ளிக் குதியுங்கள். இறைவனின் கருணையின் கருவூலங்கள் மீண்டும் ஒருமுறை புதிய மகத்துவத்துடன தனது கதவைத் திறந்துள்ளது. இந்த கருவூலத்தைப் பெறுவதற்காக இந்த வாசல் வழியாக நுழைபவர்கள் ஆன்மீக செல்வத்தால் தம்மை நிரப்பிக் கொள்வார்கள்.

இன்றைய காலத்தில் முஸ்லிம்களின் மத்தியில் ஒருவித நிம்மதியற்ற நிலை காணப்படுகிறது. இதிலும் சிலருக்கு மார்க்கத்தின் உதவிக்கான தேடல் உள்ளது. சில நேர்மையானவர்களும் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு வழிகாட்டல் இல்லை. அவர்ளுக்கு வழி தென்படவில்லை. இதனால் அவநம்பிக்கை அடைகிறார்கள். பின்னர் இந்த அவநம்பிக்கை நிம்மதியின்னையில் இன்னம் அதிக முன்னேற்றம் கண்டு தவறான வழியின் பால் இட்டுச் செல்கிறது. எனவே இவ்வாறான மக்கள் இதை புரிந்து கொள்ள வேண்டும். இவர்களிடம் நாம் தூதுச் செய்தியை முடிந்தவரை கொண்டு செல்ல வேண்டும். இந்த கவ்ஸரின் நீரூற்றை இறைவன் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உணமை நேசரின் மூலமாக மீண்டும் ஓடச் செய்து விட்டான். இவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது கொண்ட நேசத்தின் காரணமாக நுபுவ்வத்தின் பதவியைப் பெற்றார்கள். எனவே அவநம்பிக்கையை போக்க வேண்டுமென்றால் இந்த மஸீஹிடம் வந்து தம்மை இணைத்துக் கொண்டு தமது அவநம்பிக்கையைப் போக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால் நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்

இறை உதவியைப் பெற்ற மனிதர் இவராவார். நன்றாக சிந்தித்துப் பாருங்கள். எல்லா சக்திகளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குரலை அமுக்குவதற்கு ஒன்றுசேர்ந்தன. கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இவை ஒன்றாக உள்ளன. ஆனால் இந்த குரல் இப்போது உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரவிக் கொண்டிருக்கிறது. இது மிகப்பெரும் மகத்துவத்துடன் உலகில் எதிரிரொலிக்கிறது. இன்ஷா அல்லாஹ் இன்னும் எதிரொலித்துக் கொண்டே செல்லும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்கு ஆதரவாக நிலநடுக்கங்கள் வரும் என்று கூறியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

இந்த அடையாளங்கள் வெளிப்பட்ட பின்னர் இதோடு முடிவடைந்து விடாது. மாறாக இன்னும் பல அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டே செல்லும். மனிதனின் கண்கள் திறக்கும். என்ன நடக்கப் போகிறது? என்று மிரட்சியுடன் மனிதன் கேட்கும் அளவுக்கு நிகழ்ந்து கொண்டேயிருக்கும். முன்பை விட மிகவும் மோசமான நாள் வரும். நான் மிகவும் கடினமான வேலையைக் காட்டுவேன். மக்கள் தமது உள்ளங்களை சீர்திருத்தாத வரை நான் விடமாட்டேன் என்று இறைவன் கூறுகிறான்.

உலகத்தின் ஒவ்வொரு நாளும் இயற்கை சீற்றங்களின் பிடியில் உள்ளதை நாம் காண்கிறோம். உலகம் இதை ஒரு எதேச்சையான இயற்கை மாற்றங்கள் தான் என்று எண்ணுகின்றன. விஞ்ஞானிகளின் கருத்தின்படியும் உலகவாதிகளின் கருத்தின் படியும் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கின்ற பொதுவான இயற்கை சீற்றங்கள் இவையாகும் என்று எண்ணி இதை அலட்சியப்படுத்திக் கொண்டு தம்மை படைத்த இறைவனின் பக்கம் கவனம் இல்லை என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றத்திற்கு இந்த நிலநடுக்கங்களுடன் மிக நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த இயற்கை பேரழிவுகள் உலகத்தை தனது பிடியில் ஆட்டிப் படைத்துக் கொண்டே செல்லும். எனவே உலகத்தை விழிப்பூட்டுவது இன்று ஒவ்வொரு அஹ்மதியுடைய பொறுப்பும் ஆகும். எங்கு அஹ்மதிகள் தமது சீர்திருத்தத்தின் பக்கமும் தமது உறுதிப்பாட்டின் பக்கமும் கவனம் செலுத்துகிறார்களோ அங்கு இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்கவும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். உலகத்தை இறைவனின் அருகில் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இது நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மிகவும் முக்கியமான பணியாகும். அன்பு, நேசம் ஆகிய தூதுச் செய்தியை வழங்கிய பின்னர் அடுத்த போதனை நமது அன்பு, நேசம் மற்றும் சமாதானத்தின் நமது குரல் நாம் மனித இனம் அழிவதிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கிறது. உலகத்திற்கு இறைவனை அடையாளம் காட்டுங்கள். இதனால் மக்கள் இந்த பேரழிவுகளிலிருந்து இதன் மூலம் பாதுகாப்பாக இருக்க முடியும். மனிதனை இறைவன் படைத்ததன் குறிக்கோளை மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். மனிதன் தனது பிறப்பின் நோக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இறைவன் அவ்வப்போது இயற்கைப் பேரழிவுகளை அனுப்பிக் கொண்டிருக்கிறான். மனிதன் கவனம் பெறவில்லையென்றால் இந்த அழிவுகள் வந்து கொண்டேயிருக்கும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். உலகத்தை விழிப்பூட்டுவதற்கான இந்தப் பணி இன்று நம்மைச் சார்ந்ததாகும். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணியாகும். வேறு யாரும் விழிப்பூட்டுபவர் உலகில் இல்லை. ஏனென்றால் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத்தான் இறைவன் ஹஸ்ரர் ரஸூல் (ஸல்) அவர்களின் அடிமைத் தனத்தால் இறைவனுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய, அவனது சிறப்பான நெருக்கத்தை உடைய பதவியை வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் புதல்வன் என்ற உயர் பதவியை வழங்கியுள்ளதாக ஒரு இல்ஹாமில் இறைவன் கூறுகின்றான்.

''ரஸூலுல்லாஹ்வின் மகனே! நான் உம்முடன் உள்ளேன்.''

எனவே, இவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பணியை முழுமைப்படுத்த வந்த ரஸூலுல்லாஹ்வின் ஆன்மீக மகனாவார்கள். இதுவே அவர்களை ஏற்றுக் கொள்பவரது பொறுப்பாகும்.

இறைவனின் நட்பை பெறவேண்டுமென்றால் இறைவனின் அருட்கொடைகளுக்கு வாரிசாக வேண்டுமென்றால் தப்லீகிற்கான பணிகளை முன்பை விட அதிகமாக செய்ய வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக உலகத்தில் தோன்றிய கடுமையான பேரழிவுகளின் தன்மைக்கேற்ப அதே வேகத்துடன் உலகத்தை எச்சரிப்பதும் விழிப்பூட்டுவதும் அவசியமாகும். குறிப்பாக முஸ்லிம்களுக்கு புரிய வைப்பது அவசியமாகும். இந்த இல்ஹாமோடு வந்த இன்னொரு இல்ஹாம் இதுவாகும்.

"உலகத்தில் வாழும் எல்லா முஸ்லிம்களையும் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்ப்பீராக."

இந்த கட்டளை இந்த இல்ஹாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டதாகும். எனவே இது அவர்களுடைய பணியாகும். இதை அவர்கள் செய்தார்கள். எனினும் இது அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் பொறுப்பும் ஆகும். இந்த வகையில் இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பது நமது பொறுப்பாகும். சில முஸ்லிம் நாடுகளில் அஹ்மதிகளுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எனவே நாம் பகிரங்கமாக தப்லீக் செய்ய முடியாது. பெயர் தாங்கிய ஆலிம்கள் பொதுமக்கள் இந்த தூதுச் செய்தியை கேட்காமலிருக்க பல இடையூறுகளை செய்து வருகின்றனர். ஆனால் ஒரு வழி அடைபட்டால் இன்னொரு வழியை நாம் பயன்படுத்தலாம். ஒரு பகுதியில் தடைபட்டால் இன்னொரு பகுதியில் தப்லீக் செய்யலாம். ஒரு நாட்டில் தடை செய்யப்பட்டால் இன்னொரு நாட்டில் தப்லீக் செய்யலாம். இந்த நாடுகளில் அஹ்மதிகளுக்கு நேரடியாகவும் பகிரங்கமாகவும் தப்லீக் செய்ய அனுமதி இல்லாவிடில் இறைவன் M.T.A -வின் மூலமாக தப்லீக் செய்வதற்கான ஏற்பாட்டை நமக்கு தந்துள்ளான். இந்த வழியின் மூலமாக எல்லா தடைகளையும் மீறி நமது தப்லீக் சென்றடைந்து கொண்டிருக்கிறது. இறை அருளால் இதன் மூலம் பைஅத்தும் நடந்து வருகிறது.

இன்றும் சில நாடுகளில் சட்டப்பூர்வமான தடை இல்லை. ஆனால் சில உலமாக்களின் எதிர்ப்பு இருந்து வருகிறது. இவர்களிடையிலும் சில நல்ல உள்ளங்கள் இருக்கின்றன. அவர்கள் நமது கூட்டங்களில் கலந்து கொண்டு, நமது நிகழ்ச்சிகளைக் கண்டு நம் பக்கம் வருகின்றனர். சட்டப்பூர்வமான தடை இல்லாத நாடுகளில் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகளில் நமது முயற்சிகள் முன்பை விட அதிக ஊக்கத்துடன் இருக்க வேண்டும். இது ஒவ்வொரு இடத்திலுள்ள ஜமாஅத் அமைப்பின் பணியாகும். ஆப்பிரிக்காவின் சில நாடுகளில் சில இமாம்கள் தமது சீடர்களுடன் ஜமாஅத்தில் வந்து இணைகிறார்கள். இதுவும் இறைவனின் செயலாகும். இறைவனே உள்ளங்களை திருப்புகிறான். நமது முயற்சிகள் அற்பமானவையாகவே இருக்கின்றன.

**இந்த இல்ஹாமை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உலகத்தில் வாழும் எல்லா முஸ்லிம்களையும் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்ப்பீராக என்ற இந்த கட்டளை ஒரு குறிப்பான சிறப்புவாய்ந்த கட்டளையாகும். கட்டளை இரண்டு வகைப்படுகின்றன. ஒன்று ஷரீஅத் வடிவிலானதாகும். உதாரணமாக, தொழுகையை நிலைநாட்டுங்கள்; ஸக்காத்து கொடுங்கள்; கொலை செய்யாதீர்கள் போன்ற இவ்வாறான கட்டளைகளில் முன்னறிவிப்பு காணப்படுகிறது. அதாவது இதை மீறுகின்ற சிலர் இருப்பார்கள். உதாரணமாக, யூதர்களுக்கு தவ்ராத்தில் வசனங்களை முன்னுக்குப் பின் மாற்றாதீர்கள் என்று கட்டளையிடப்பட்டிருந்தது. இதன் மூலம் சிலர் வசனங்களை மாற்றுவார்கள் என்பதை இறைவன் தெரிவித்தான். அவ்வாறே நிகழ்ந்தது. எனவே இந்தக் கட்டளை ஷரீஅத்தின் கட்டளையாகும். இரண்டாவது வகையான கட்டளை கூனி கட்டளையாகும். இந்த கட்டளை இறை நியதியாகவே உள்ள கட்டளையாகும். உதாரணமாக,

அதாவது நெருப்பே நீ இப்ராஹீமின் மீது குளிர்ந்து விடு; அமைதியாகி விடு என்று கட்டளை இடப்பட்டதும் அது முழுமையாக அவ்வாறே நிகழ்ந்தது. எனது இல்ஹாமில் காணப்படுகின்ற கட்டளையும் இந்த வகையைச் சார்ந்ததாகவே தென்படுகிறது. இறைவன் உலகத்தில் வாழ்கின்ற எல்லா முஸ்லிம்களும் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர வேண்டும் என்று விரும்புகிறான். எனவே அவ்வாறே ஒன்றுசேர்க்கப்பட்டே

தீருவார்கள். அவர்களில் எந்தவொரு கருத்து வேறுபாடும் இருக்காது என்பது இதன் பொருளன்று. கருத்து வேறுபாடு இருந்தாலும் அது அந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த இல்ஹாமிற்கு விளக்கம் அளித்துள்ளார்கள். இந்த கட்டளை இறைவனின் கூனி கட்டளை வகையைச் சேர்ந்ததாகும் என்ற நற்செய்தியை நமக்கு வழங்குகிறது. இதைப் பற்றி இறைவன் கூறுகிறான்: நான் குன் – ஆகுக என்றால் அது ஆகிவிடும். எனவே இங்கு கூறப்பட்டுள்ள கட்டளையைப் பற்றியும் இறைவன் குன் – ஆகுக என்று கூறிவிட்டான். இறைவன் குன் – ஆகுக என்று கூறிவிட்டால் உடனே அது ஆகிவிடுகிறது என்பது இதன் பொருளன்று. மாறாக, இயற்கை சட்டத்தின் படி ஒன்று ஆகுவதற்கு எவ்வளவு காலம் தேவைப்படுமோ அது ஆகிறது. இறைவனின் நுண்ணிய ஞானத்திற்கேற்ப எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலம் ஆகிறது. ஆனால் இறுதி விளைவு இறை கட்டளையின்படி நிறைவேறுகிறது. உதாரணமாக, இறைவன் குன் – ஆகுக என்று கட்டளை இட்ட பின்னர் குழந்தை உருவாவதற்கான அடிப்படை உருவாகி விடுகிறது. ஆனால் ஒரு மனிதனின் குழந்தைக்கு இயற்கைச் சட்டத்தின்படி பிறப்பதற்கான காலம் எவ்வளவு தேவைப்படுகிறதோ அவ்வளவு காலம் ஆகிறது. இறைவன் குன் என்று கூறியவுடன் இரண்டு நாட்களிலோ அல்லது இரண்டு நிமிடங்களிலோ குழந்தை பிறந்து விடுவதில்லை. ஆனால் அந்த குழந்தை பிறப்பதற்கு தகுதியாவதற்கான காலம் முழுமை அடைகிறது. பின்னர் அதற்கான முழு செயல்பாடும் இறைவனின் குன் – ஆகுக என்ற கட்டளையின்படிதான் நடக்கிறது. எனவே இங்கு யாரும் தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. இறைவனின் தக்திர் – நியதி முஸ்லிம்கள் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்வார்கள் என்று எழுதி வைத்துள்ளது. இதற்கான செயல்பாடு ஆரம்பமாகி விட்டது. மெல்ல மெல்ல முஸ்லிம்களின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து வருகின்றனர்.

முஸ்லிம் நாடுகளில் சில நாடுகளில் அஹ்மதிகள் மூன்றாம் தர குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க நமது ஜமாஅத்தில் முஸ்லிம்கள் எவ்வாறு சேருவார்கள் என்று எண்ணி கவலையடைய வேண்டாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இது இறைவனின் தக்தீர் – நியதியாகும். இது கண்டிப்பாக நிறைவேறும் இன்ஷா அல்லாஹ் கண்டிப்பாக நிகழும். நமக்கு இன்று இழைக்கப்படுகின்ற துன்பங்கள் முஸ்லிம்களாலேயே இழைக்கப்படுகின்றன. இன்ஷா அல்லாஹ் இவர்களிலிருந்தே அன்பு மற்றும் நேசத்தின் துளிகளும் சிந்தும். இதை இன்ஷா அல்லாஹ் நாம் பார்ப்போம்.

பலவீனமானவர்களும் இந்த நம்பிக்கையில் உறுதியுடன் இருங்கள். உலக மோகத்தில் சூழ்ந்துள்ளவர்களும் இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இறைவனின் நியதியே இறுதியில் வெற்றி பெறும். எனவே நாம் எந்தவோர் இடத்திலும் பலவீனத்தைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. அல்லது வெட்கப்படவோ அல்லது எதிரிகளின் எதிர்ப்பினால் துன்புறவோ வேண்டாம். நாம் நமது ஈமானை வெளிப்படுத்தி விட்டால் நம்முடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்று அஞ்ச வேண்டாம். இவ்வாறான துன்பங்கள் வரத்தான் செய்யும். மூஃமின்கள் இந்த துன்பங்களுக்கு ஒரு ஊசி குத்துவதால் ஏற்படும் வேதனையை விட அதிக முக்கியத்துவம் வழங்குவதில்லை. இவ்வாறு ஊசிகளைக் குத்துபவர்களுக்கு பயந்து நாம் நமது வேலையை நிறுத்தி விட முடியாது. நாம் நமது ஈமானை மறைக்க முடியாது. பாகிஸ்தானில் அஹ்மதிகளில் பெரும்பான்மையினர் இன்னும் சொல்லப்போனால் 99.99% மக்கள் கடுமையான எதிர்ப்புப் புயலிலும் மிகவும் துணிச்சலாக இதை எதிர்கொண்டு வருகிறார்கள்.

பாகிஸ்தான் மற்றும் இந்தோனேஷியா அல்லது எந்த இடத்திலும் அஹ்மதிய்யத்திற்கு எதிராக எதிர்ப்புப் புயல் எழும்போது அங்குள்ள அஹ்மதிகளின் தியாகங்கள் தான் உலகில் தப்லீகிற்கான புதிய புதிய வழிகளைத் திறந்து வைக்கின்றன. இன்ஷா அல்லாஹ் ஒருநாள் முஸ்லிம் உலகும் முஸ்லிமல்லாத உலகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தமது தொடர்பை இணைத்துக் கொண்டு உம்மத்தே வாஹிதா ஒரே மார்க்கம் என்ற காட்சியை காண்பிக்கும். இது இறைவனின் வாக்குறுதியாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் அறிவிக்கிறான். அவன் எனக்கு மகத்துவத்தை வழங்குவான். எனது அன்பை உள்ளங்களில் நிலைகொள்ளச் செய்வான். எனது ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்புவான். எல்லா பிரிவுகளை விடவும் எனது பிரிவை இறைவன் வெற்றியடையச் செய்வான். எனது கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சத்தியத்தின் ஒளி, தமது சான்றுகள் மற்றும் அடையாளங்களின் மூலம் எல்லாருடைய வாயையும் அடைக்கும் அளவிற்கு அளவு மற்றும் ஞானத்தில் முன்னேறுவார்கள்.

எனவே இது ஒரு மிகப்பெரிய அடையாளமாகும். இது உலகத்தில் எல்லாரையும் வெற்றி கொள்வதுடன் தொடர்புடையதாகும். நாம் ஈமானில் இன்னும் அதிக உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். இதுவே நமது தற்போதைய பணியாகும். நாம் நமது இறை வணக்கங்களை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும். இறைவனோடு உள்ள தொடர்பை அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். இன்னும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நடைபெற்று வரும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான பணிகளில் அவர்களுக்கு உதவியாளர்களாக ஆக வேண்டும். இதன் மூலம் நாமும் நமது சந்ததிகளும் என்றென்றும் இறைவனின் அருள்களை பெருமளவில் பெறுபவர்களாக இருப்போமாக. அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக.

இன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சில நபர்களின் ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா சாஹிப் ஸாதா ராஷித் லத்தீஃப் சாஹிப் ராஸ்தி. இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவராவார். இவர்கள் ஏப்ரல் 27 ஆம் தேதி லாஸ் ஏஞ்சல்ஸில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் (ரலி) அவர்களின் பேரனும், சாஹிப் ஸாதா முஹம்மது தய்யூப் லத்தீஃப் சாஹிபின் மகனும் ஆவார். தொடக்கக் கல்வியை முடித்த பின் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி லாஹூரில் படித்தார்கள். பின்னர் ஆஃப்கானிஸ்தான் சென்று கொஞ்ச காலம் அங்கு இருந்தார்கள். ஜமாஅத்துடன் மிகவும் தூய்மையான தொடர்பு வைத்திருந்தார்கள். இவர்களின் வீட்டில் ஜமாஅத் சகோதரர்கள் தொழுது வந்தனர். 1965 -ல் இவர் அமெரிக்கா சென்று விட்டார்கள். அங்கு மேற்படிப்பை முடித்தார்கள. அதன்பின் அங்கேயே வசிக்கலானார்கள். அமெரிக்காவில் ஒரு ஜமாஅத்தின் தலைவராகவும் இருந்தார்கள். வெகு காலமாக கலிஃபோர்னியாவில் வாழ்ந்து வந்தார்கள். ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்தார்கள். 2005 -ல் காதியானில் நடந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அங்கும் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியதை ஏற்று தஸ்கிரத்துஷ்ஷஹாதத்தைன் என்ற நூலை துர்ரி என்ற ஆஃப்கானிஸ்தான் நாட்டு மொழியில் மொழிபெயர்த்தார்கள். இவர்களுக்கு ஒரு மனைவியைத் தவிர ஒரு மகளும் இரண்டு மகன்களும் உள்ளனர். அல்லாஹ் இவர்களது தர்ஜாவை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா முபாரக் மஹ்மூத் சாஹிப் முரப்பியே ஸில்ஸிலா இவர்களது ஜனாஸா ஆகும். இவர்கள் மிக நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டு மே 4 ஆம் தேதி மரணமடைந்தார்கள். 42 வயதில் இவர்கள் வஃபாத் ஆகி உள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1989 -ல் இவர்கள் ஜாமிஆவில் கல்வியை முடித்தார்கள். ஒன்பது ஆண்டுகள் வரை பாகிஸ்தானில் பல இடங்களில் பணிபுரிந்து வந்தார்கள். பின்னர் 1998 -ல் தான்ஸானியா சென்றார்கள். அங்கு எட்டு வருடகாலம் பணிபுரிந்து வந்தார்கள். தன்ஸானியாவில் வைத்து இவர்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டது. அங்கிருந்து மீண்டும் பாகிஸ்தான் திரும்பினார்கள். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. வகாலத்தே தஸ்னீஃபில் இவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். உடல்நலக் குறைவாக இருந்தபோதிலும் மிகவும் அர்ப்பணிப்போடு பணிபுரிந்தார்கள். இந்த நோய் மிகவும் வேதனை அளிக்கக்கூடிய நோயாகும். அதை பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்கள். ஒருபோதும் நன்றிகேடான வார்த்தையை இவர் கூறியதில்லை. மிகவும் சிரித்த முகத்துடன் எப்போதும் எல்லாரோடும் பழகுவார். இவர் மூஸி ஆவார். ஒரு மனைவியைத் தவிர மூன்று மகன்கள் உள்ளனர்.

இவருடைய பெற்றோரும் இருக்கிறார்கள். 4 சகோதரர்கள் உள்ளனர். மீர் பூர் காஸ் மாவட்டத்தின் அமீராகிய ஸய்ஃப் அலி ஷா சாஹிபின் மகன் ஆவார். ஜெர்மனியின் முபல்லிக் இன்சார்ஜ் ஹைதர் அலி ஸஃபர் சாஹிபின் சகோதரியின் மகன் ஆவார்.

மூன்றாவது ஜனாஸா ஷேகுபூரா ஊரின் செய்யது வாலா பகுதியைச் சேர்ந்த மியான் முனவ்வர் அஹ்மது சாஹிபின் மகன் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் அவர்களின் ஜனாஸா ஆகும். முஸஃப்பர் அஹ்மது சாஹிப் ஃபர்ஸானா யகீன் சாஹிபா, அஸீஸா அமத்துன் நூர் சாஹிபா, அஸீஸம் வலீத் அஹ்மத், அஸீஸம் தஸவ்வுர் அஹ்மது ஆகியோர் பைஸலாபாத்திலிருந்து சனியூட் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர். வழியில் விபத்து நடந்தது. இது ஒரு குடும்பமாகும். விபத்தில் முழு குடும்பமும் இறைவனடி சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 6, 4 மற்றும் 2 வயது உடைய மூன்று குழந்தைகள் இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் மியான் ஷாபான் சாஹிப் (ரலி) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் காதியானுக்கு சென்று ஒரு கனவின் மூலமாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். முஸஃப்பர் அஹ்மது சாஹிப் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆக இருந்தார்கள். மேலும் ஹல்காவின் புதிய அஹ்மதிகளை கண்காணிக்கும் செயலராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றவராவார். வஃபாத்திற்கு முன்பு தஹ்ரீகே ஜதீத் சந்தாவின் செயலராகவும், இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலராகவும், நாஸிம் அத்ஃபால் ஆகிய பொறுப்புகளை வகித்தவராக இருந்தார். மிகவும் சுத்தமாக பேசுபவர், நீதியை விரும்புபவர், தூய்மையான மனிதராக இருந்தார். செய்யத்வாலாவின் பள்ளிவாசல் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் இவர் தமது குழுவுடன் சென்று பணியாற்றினார். ஏனென்றால் அங்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அவைகளை பேணி ஆக வேண்டும். கொஞ்ச காலம் (அஸீரானே ராஹே மவ்லா) இறைவழியில் சிறைவாசம் சென்றிருந்தார்கள். இவர்களுக்கு இரண்டு சகோதரிகளும் நான்கு சகோதரிகளும் உள்ளனர். இவர்களது மனைவியின் குடும்பத்தில் இவரது தந்தை லாஹூரைச் சேர்ந்த ஷேக் ஃபஸ்ல் கரீம் சாஹிப், ஆறு சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் உள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவரின் தர்ஜாக்களையும் உயர்த்துவானாக. இவர்களுடைய பாவங்களை மன்னிப்பானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 13.05.2011**

Translated by : **Maulvi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**